DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

# CC.No.166/2017

## Deposition of Witness (Accused) : DW1

| Name | செந்தில்முருகன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | அஞ்சாபுலி | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 11.09.2025. | | | |

**முதல் விசாரணை** : நான் இவ்வழக்கில் எதிர்மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்து பார்த்து தான் கையொப்பமிட்டுள்ளேன். நான் பிரமாண வாக்குமூலத்தின் பேரில் தாக்கல் செய்த கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மனுவில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்

| S.Nos | Dated | Documents | |
|---|---|---|---|
| 1. | 01.05.2017 | தேதியிட்ட எ. மணிவண்ணன் (செந்தில்குமரனுக்கு) எதிர்மனுதாரரால் வழங்கப்பட்ட ரூ.50,000/-க்கான பண ரசீது (Cash voucher). | எ.ம.சா.ஆ 1 |
| 2. | 25.08.2017 | தேதியிட்ட S.செந்தில்குமரனுக்கு எதிர்மனுதாரரால் வழங்கப்பட்ட ரூ.44,000/-க்கான பண ரசீது (Cash voucher). | எ.ம.சா.ஆ 2 |

**மேற்படி அட்டவணையிடப்பட்ட ஆவணங்கள் எ.ம.சா.ஆ 1 முதல் எ.ம.சா.ஆ 2 வரையாக குறியீடு செய்யப்படுகிறது.**

(எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் இவ்வழக்கானது எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக நிபந்தனையின் பேரில் அடுத்த தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

## CC.No.166/2017

Deposition of Witness: DW2

| Name | மணிவண்ணன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | அண்ணாமலை | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 11.**09.2025.** | | | |

(Accused present)

**முதல் விசாரணை** : நான் செந்தில்முருகனுக்கு நண்பராவேன். இவ்வழக்கின் மனுதாரர் செந்தில்குமரன் மாமா எனது ஊர்க்காரர் ஆவார். செந்தில்முருகனிடம், எனது மாமா செந்தில்குமரன் ரூ.1,00,000/-க்கான சீட்டு போட்டிருந்தார். அதில் ரூ.94,000/- கட்டிவிட்டார். அவர் செந்தில்முருகனிடம் 19 வது சீட்டினை தனக்கு தருமாறு கேட்டிருந்தார். அதற்கு செந்தில்முருகன் அந்த சீட்டினை எனது மாமாவிற்கு கொடுக்கவில்லை. ஏனென்றால் என் மாமா சீட்டு பணத்தினை தாமதமாக கட்டி வந்தார், அதனால் அவர் எனது மாமாவிற்கு சீட்டினை கொடுக்காமல் தாமதம் செய்து வந்தார். எனவே எனது மாமா செந்தில்முருகனிடமிருந்து மேற்படி அவர் கட்டிய ரூ.94000/- சீட்டு தொகைக்கு பிணையாக ரூ.94000/- என்று பணத்தின் மதிப்பு மட்டும் பூர்த்தி செய்யப்பட்ட, செந்தில்முருகனால் கையெழுத்து இடப்பட்ட ஒரு காசோலையை என் மூலமாக 2017 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார். அதன்பிறகு 2017 ஆம் ஆண்டு, மே மாதம், 1ம் தேதி, செந்தில்முருகன் எனது மாமாவிடம் கொடுக்க சொல்லி ரூ.50,000/- ஐ மேற்படி சீட்டு தொகையின் ஒரு பகுதியாக கொடுக்க சொன்னார். அதனை அன்றே, எனது மாமா செந்தில்குமரனின் மனைவியிடம் எனது மாமா, அவரது மனைவியிடம் கொடுக்க சொன்னதால் அவர்களது வீட்டில் வைத்தே கொடுத்தேன். மேற்படி சீட்டு தொகையின் மீதத்தொகையான ரூ.44000/-ஐ 3 மாதத்தில் செந்தில்முருகன் எனது மாமாவிற்கு திருப்பி கொடுத்துவிடுவதாக கூறி அவரிடம் கொடுக்கப்பட்ட காசோலையை திருப்பி வாங்கிவர சொல்லி என்னிடம் கூறினார். அதனை நான் எனது மாமாவிடம் சொன்னதற்கு மீதத்தொகையை செந்தில்முருகன் கொடுத்தால் தான் நான் அந்த காசோலைய திருப்பி தருவேன் என்று கூறிவிட்டார். அதனை நான் செந்தில்முருகனிடம் கூறினேன். மேற்படி மீதத்தொகையை அதன் பின்னர் எனது மாமாவிடம் கொடுத்துவிட்டதாக செந்தில்முருகன் என்னிடம் கூறினார். அதன் பிறகு நான் எனது வேலை தொடர்பாக சென்னைக்கு சென்றுவிட்டதால் இதுப்பற்றி எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை. அதன்பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

**(எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் இவ்வழக்கானது எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக நிபந்தனையின் பேரில் அடுத்த தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**